

சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!







# ஆதித்தமிழர் பேரவை

# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் :

## உலக மகளிர் நாளை முன்னிறுத்தி 18.03.2012 அன்று நாமக்கல் நகராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உழைக்கும் பெண்கள் விடுதலைக்கான" ஆதித்தமிழச்சிகளின் உரிமை மீட்பு எழுச்சி மாநாடு தீர்மானங்கள்.


தமிழகத்தில் வாழக்கூடிய மக்கள்தொகையில் 50 லட்சத்திற்கு மேலாக வாழக்கூடிய உழைக்கின்ற மக்களான அருந்ததியர் மக்களின் மேம்பாட்டிற்கான கல்வி, வேலை, பொருளாதாரத்திற்கான சமூக நீதி தளங்களிலும், தீண்டாமை, வன்கொடுமை, இழிவொழிப்பு, சுயமரியாதை போன்ற மாண்புக்கான தளங்களிலும் தொடர்ந்து போராடி வருகின்ற ஆதித்தமிழர் பேரவையின் மகளிர் பிரிவான ஆதித்தமிழர் மகளிர் பேரவை சார்பில் 18.03.2012 ஞாயிற்றுகிழமை அன்று நாமக்கல், நகராட்சி மண்டபத்தில் நடைபெற்ற "உழைக்கும் பெண்களின் விடுதலைக்கான" ஆதித்தமிழச்சிகளின் உரிமை மீட்பு எழுச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.


சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com

சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!







# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் :

**தீர்மானம் 1:**

சமூக நீதி என்ற இடஒதுக்கீட்டு கொள்கையை முழுமையான அளவில் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு இந்தியாவிற்கே வழிகாட்டியாக செயல்படுகின்ற தந்தை பெரியார் பிறந்த மண்ணான தமிழகத்தில் வாழக்கூடிய மக்களில் சரிபாதியான மக்கள் தொகையில் வாழக்கூடிய உழைக்கின்ற பெண்களின் மேம்பாட்டிற்காக, சுயமரியாதைக்காக கல்வி, வேலை, பொருளாதாரம் அரசியல் தளங்களில் முழுமையாக பெண்கள் பங்கு பெற 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அனைத்து தளங்களிலும் அறிவித்து நடைமுறை படுத்திட வேண்டும் என இந்த மாநாடு மைய, மாநில அரசுகளை வற்புருத்தி கேட்டுக் கொள்கின்றது.

**தீர்மானம் 2:**

தமிழகத்தில் வாழக்கூடிய பட்டியலின அருந்ததிய உழைக்கும் பெண்கள், இன்றைய அளவிலும், கிராமத்தில் பண்ணை அடிமைகளாகவும், பட்டாசு ஆலைகள், செங்கல் சூலைகள், நூற்பு ஆலைகள் போன்ற இடங்களில் கொத்தடிமைகளாக வாழக்கூடிய நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது. எனவே அரசு இதில் முழு கவனம் செலுத்தி அவர்களை மீட்டெடுத்து கொத்தடிமை ஒழிப்பு சட்டத்தின் கீழ் மறுவாழ்வு அளித்திட போர்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டும் என தமிழக அரசை இந்த மாநாடு கேட்டுக்கொள்கின்றது.


**தீர்மானம் 3:**


தமிழகத்தில் பெரும்பான்மையாக வாழக்கூடிய உழைக்கின்ற பட்டியலின பெண்கள். குறிப்பாக அருந்ததியர் பெண்கள்: கல்வி, வேலை, பொருளாதாரமின்மையின்

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி, இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com







நாள் :

காரணமாக மிகவும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்றனர். இதன் காரணமாக தங்களை வறுமையில் இருந்து சிறிதளவாவது மீட்டுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் 14 வயது முதல் 22 வயதுக்குட்பட்ட திருமணமாகாத இளம் பெண்களை, திருப்பூர், கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம், போன்ற மாவட்டங்களில் உள்ள பஞ்சாலை, நூற்பாலை போன்ற ஆலைகளில் 5 ஆண்டுகளுக்கு மேலான ஒப்பந்த முறையில் முன்பணமாக 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை பெற்றுக்கொண்டு சம்பளம் இல்லாமல் பணியாற்றுகின்ற "சுமங்கலி திட்டம்" என்ற திட்டத்தை ஏற்படுத்தி பெரும் முதலாளிகள் அப்பாவி உழைக்கின்ற பெண்களின் உழைப்பை சுரண்டுகின்றனர். மேலும், அவர்களை பாலியல் ரீதியான ஒடுக்குமுறைகளையும் கட்டாயப்படுத்தி திணிக்கின்றனர். இதை பலமுறை அரசின் கவனத்திற்கு எங்கள் அமைப்பு கொண்டு சென்றுள்ளது. எனவே, சுமங்கலி திட்டம் என்ற பெயரில் பெண்களை ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கும் ஆலை முதலாளிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து ஆலை உரிமத்தை ரத்து செய்வதோடு அந்த திட்டத்தில் சிக்குண்டு கிடக்கும் பெண்களை மீட்டு அரசு மறுவாழ்வு அளித்து வேலைக்கான உத்ரவாதத்தை ஏற்படுத்திட வேண்டும் என இந்த மாநாடு தமிழக அரசை கேட்டுக் கொள்கின்றது.


<u>தீர்மானம் 4:</u>


மனித கழிவை மனிதனே அகற்றும் இழிவை ஒழித்திட மத்திய அரசு 1993-ல் கொண்டுவரப்பட்ட, உலர் கழிப்பிட தடை சட்டத்தை இது வரை எந்த மாநில அரசுகளும், அரசதிகாரிகளும் - நடைமுறைபடுத்தால் உயர் சாதி மனோ பாவத்தோடே செயல்பட்டு வருகின்றனர். இந்த தொழிலில் ஆண்களை விட பெண்களே பெரும்பான்மையாக செய்திட

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com







நாள் :

கட்டாயப்படுத்தப்படுகின்றனர். எனவே இந்த மனித கழிவை மனிதனே அகற்று நிலை முற்றிலுமாக ஒழித்து அவர்களை மாற்றுத் தொழிலுடன் கூடிய மறுவாழ்வு ஏற்படுத்திட மைய, மாநில அரசுகள் கடுமையான சட்டம் இயற்றி அதை நடைமுறைபடுத்திட வேண்டும் என இந்த மாநாடு வலியுறுத்துகின்றது.

**தீர்மானம் 5:**


பட்டியலின அருந்ததியர் குழந்தைகள் வறுமையின் காரணமாக பள்ளிப்படிப்பை தொடர முடியாமல் 10ம் வகுப்பு கூட முடிக்க முடியாமல் கல்வி மறுக்கப்படுகின்றது. இந்த நிலை இன்று வரையிலும் நீடித்துக் கொண்டிருக்கின்றது என்பதுதான் கசப்பான உண்மை. எனவே இதை அரசு கணக்கில் கொண்டு அருந்ததியர் குழந்தைகளுக்கு என்று தனியாக ஆரம்ப பள்ளி முதல் கல்லூரி இறுதி வரை தடையில்லாமல் படிப்பதற்கு ஏதுவாக "உண்டு உறைவிட" கல்வி நிலையங்களை தொடங்கி அதில் தரமான கல்வி, உணவு, உடை, உறைவிடத்தை ஏற்படுத்தி அருந்ததியர் குழந்தைகளை முன்னேற்றம் அடைய செய்திட வேண்டும் என இந்த மாநாடு தமிழக அரசை கேட்டுக் கொள்வதோடு, பட்டியலின மக்களின் மேம்பாட்டிற்காக மைய அரசு கொண்டு வந்துள்ள "துணைத்திட்ட" நிதி முழுமையையும் பட்டியலின மக்களின் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்காக மட்டுமே செலவிட வேண்டுமென இந்த மாநாடு கேட்டுக்கொள்கின்றது.


**தீர்மானம் 6:**

பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற வீட்டுமனைப் பட்டாக்கள், பெண்களின் பெயரால் வழங்கப்படுவது போல் அருந்ததிய மக்களை குறிப்பாக

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235
மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com







நாள் :

பெண்களை, கொத்தடிமை, பண்ணை அடிமை முறையில் இருந்து முற்றிலுமாக மீட்டிட கிராமபுற விவசாய கூலிகளுக்கு 5 ஏக்கர் உழவுநிலம் வழங்கிட வேண்டும், அந்த நிலங்கள் அனைத்தும் பெண்களின் பெயரிலேயே வழங்கிட வேண்டும் என தமிழக அரசை இந்த மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

**தீர்மானம் 7:**

பட்டியலின அருந்ததிய பெண்கள் வறுமையின் காரணமாக கந்துவட்டி, மீட்டர் வட்டி, மைக்ரோ வட்டி, மாத வட்டி என பலவிதமான வட்டிக் கொடுமையின் கீழ் கடன் பெற்று அந்த கடன்களை முற்றிலுமாக அடைக்க முடியாமல் மீளா கடனாளியாக இருந்து வருகின்றனர். இந்த மக்களை இந்த வட்டி கொடுமைகளில் இருந்து காப்பாற்றிட அனைத்து கடன்களையும் அரசே ஏற்று பணம் செலுத்திட வேண்டும் எனவும், அரசே நடமாடும் வங்கிகளை உருவாக்கி மாதம் ஒரு முறை கிராமம் வாரியாக சென்று குறைந்த நியாயமான வட்டியில் கடன் கொடுத்து அவர்களை வறுமை கோட்டிலிருந்து உயர்த்த வேண்டும் எனவும் இந்த மாநாடு தமிழக அரசை கேட்டுக் கொள்வதோடு கந்து வட்டி கொடுக்கும் நபர்களை அரசு கண்காணிப்பு குழு அமைத்து கந்து வட்டி ஒழிப்பு சட்டத்தின் கீழ் கடுமையாக தண்டிக்க வேண்டும் எனவும் இந்த மாநாடு கேட்டுக்கொள்கின்றது.


**தீர்மானம் 8:**


அரசு அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் பணியாற்று கின்ற பெண்களை தனது அதிகாரத்தை பயன்படுத்தி பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வகை செய்திடும் விதமாக அரசு கொண்டுவந்துள்ள பெண்கள்

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com









மீதான பாலியல் துன்புறுத்தல் தடைச்சட்டத்தை (விமன்ஸ் அராஸ்மென்ட் ஆக்ட்) தீவிரமாக நடைமுறைப்படுத்திட வேண்டும் என தமிழக அரசை இந்த மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

**தீர்மானம் 9:**

அரசு மற்றும் தனியார் மெட்ரிக் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகள் கட்டணம் இல்லாமல் கல்வி பயில வகை செய்திடும் விதமாக அரசு கொண்டுவந்துள்ள 25 விழுக்காடு கல்வி உரிமை இட ஒதுக்கீடு சட்டத்தை இதுவரை எந்த கல்வி நிறுவனங்களும் நடைமுறைப்படுத்த மறுத்து விடுகின்றனர். எனவே கட்டணம் இல்லாமல் கல்வி பயில ஏழைக் குழந்தைகளை பள்ளியில் சேர்க்க மறுக்கும் நிறுவனங்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க அரசு கண்காணிப்புக் குழுவை உருவாக்க வேண்டும். அந்த குழுவில் கட்டாயம் சமூக இயக்க பிரதிநிதிகளை இணைத்து செயல்பட வேண்டும் என தமிழக அரசை இந்த மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

**தீர்மானம் 10:**

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தைச் சேர்ந்த அண்ணா பல்கலைக் கழக மாணவி ஜோதி என்ற அருந்ததியர் மாணவியின் மரணத்திற்கு இன்று வரை நீதி கிடைக்கப்பெறாமல் இருந்து வருகின்றது. எனவே ஜோதியின் மரணத்திற்கு முழு காரணமான அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் மன்னர் ஜவகம் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து ஜோதியின் குடும்பத்திற்கு நீதியும், நிவாரணமும்


சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!




# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் :





கிடைத்திட வேண்டும் என இந்த மாநாடு தமிழக அரசை கேட்டுக்கொள்கின்றது.

**தீர்மானம் 11:**


கடந்த 19 ஆண்டுகளுக்கு முன்பாக மலையின பெண்கள் மீது காவல் துறையினரால் நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமைக்கு தண்டனை வழங்குவதற்கு, முழு முயற்சி எடுத்து சமரசமில்லாமல், நீதிமன்றத்தில் போராடி வெற்றி கண்ட "தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தை" இந்த மாநாடு பாராட்டுகின்றது. அதோடு, நீதிமன்றத்தின் மூலம் தண்டிக்கப்பட்ட 215 வனத்துறை, வருவாய் துறை, காவல்துறை அதிகாரிகளில் இதுவரை 17 பேர் மீது மட்டும்தான் துறை சார்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே எஞ்சியுள்ள நபர்கள் மீதும் நீதிமன்ற உத்தரவின்படி தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மலையின பெண்களின் மறுவாழ்விற்காக 25 லட்சம் நிவாரணம் வழங்கிட வேண்டும் என தமிழக அரசை இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.


**தீர்மானம் 12:**

விழுப்புரம் இருளர் பெண்கள் மீது காவல்துறை காவலர்கள் நான்கு நபர்களால் ஏற்படுத்தப்பட்ட பாலியல் வன்கொடுமைகளுக்கு தண்டனை வழங்கிடும் வகையில் தமிழக அரசு அந்த நான்கு காவல் துறையினரை பணி நீக்கம் செய்து சிறை தண்டனை வழங்கிட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட இருளர் பெண்களுக்கு அரசு குறைந்த பட்சம் 10 லட்சம் மறுவாழ்வு நிவாரணம் வழங்கிட வேண்டும் எனவும் இந்த மாநாடு தமிழக அரசை கேட்டுக் கொள்கின்றது.

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235
மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com







ஆதித்தமிழர் பேரவை
AATHITHAMIZHAR PERAVAI
தமிழ்நாடு

நாள் :

<u>தீர்மானம் 13:</u>

தமிழகத்தில் உள்ள தலித் பஞ்சாயத்துகளில் தலித் பஞ்சாயத்து தலைவர்களை சுதந்திரமாக செயல்பட விடாமல் சாதி வெறி துணைத்தலைவர்கள் அதிகாரம் செலுத்துகின்ற காரணத்தினால் கடந்த தி.மு.க. ஆட்சியில் நெல்லை மாவட்டம் நக்கலமுத்தன் பட்டியில் ஜக்கன், என்ற தலைவரையும், மருதங்கிணற்றில் சேர்வாரன் என்ற பஞ்சாயத்து தலைவரையும் படுகொலை செய்தனர். அதைத் தொடர்ந்து நெல்லை வடக்கு தாழையூத்து பஞ்சாயத்து முன்னாள் பெண்தலைவர் கிருஷ்ணவேணி என்பவரை கொலைவெறி வன்தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

எனவே தலித் பஞ்சாயத்துகளில் துணைத் தலைவரையும் தலித்துகளையே நியமனம் செய்திட சட்டம் இயற்ற வேண்டும் எனவும் அவர்களது உயிரை பாதுகாத்திட தற்காப்பிற்காக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் தெரிவித்துள்ளபடி அரசே தனது செலவில் கைத்துப்பாக்கி வழங்கிட வேண்டும் எனவும் இந்த மாநாடு தமிழக அரசை கேட்டுக் கொள்கின்றது.

<u>தீர்மானம் 14:</u>


அண்டைநாடான இலங்கையில் அந்நாட்டு இராணுவத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையான உச்சகட்ட போரின்போது 50 ஆயிரத்திற்கும் மேலான தமிழ் மக்களை இலங்கை ராணுவம் சிங்கள இனவெறியோடு ஈவு இரக்கமின்றி படுகொலை செய்துள்ளது. இதில் தமிழின பெண்களை பாலியல் வன்கொடுமை செய்தும், சிறுவர்கள் என்று கூட பாராமல் அவர்களையும் ராஜபக்சே அரசு படுகொலைகள் செய்துள்ளது என்பதை அமெரிக்க மனித உரிமை ஆணையம் ஆதாரபூர்வமாக அறிவித்து அதை

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235


மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com



ஆதித்தமிழர் பேரவை
AATHITHAMIZHAR PERAVAI
தமிழ்நாடு



நாள் :



ஜெனிவாவில் உள்ள அய்.நா.விற்கு தீர்மானமும் கொண்டு வந்து சிங்கள இனவெறியன் கிட்லரையும் மிஞ்சுகின்ற ராஜபக்சேயையும் அவரது ராணுவ தளபதிகளையும் போர்க் குற்றவாளியாக அறிவித்து தண்டிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை இந்தியா ஆதரித்து கையெழுத்திட வேண்டும் என இந்திய அரசை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும் எனவும், போர்க்குற்றம் நடப்பதற்கு துணைபோன இந்திய அரசையும், கடந்த தி.மு.க. அரசையும் இந்த மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

**தீர்மானம் 15:**

மனித உயிர்களுக்கு மிகவும் ஆபத்தானது என்று உலக நாடுகளால் நிராகரிக்கப்பட்ட அணுசக்தி மின்சார உற்பத்தி செய்யும் அணு உலைகளை ஏனைய நாடுகளெல்லாம் தடை செய்த பிறகு இந்தியா அந்த அணு உலைகளை தமிழகத்தில் தொடங்கிவருவதை உடனே நிறுத்த வேண்டும் எனவும் தற்போது கூடங்குளத்தில் திறக்க இருக்கின்ற அணு உலையை இழுத்து மூடவேண்டும் எனவும் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகின்ற கல்பாக்கம் அணு உலையையும் மூடவேண்டும் எனவும் இந்த மாநாடு கேட்டுக் கொள்வதோடு,

திறன்வாய்ந்த விஞ்ஞானிகளைக் கொண்டு மாற்று வழியில் மின்சாரம் தயாரித்திடும் திட்டங்களை உருவாக்கி மின்சார தட்டுப்பாட்டை போக்கிட வேண்டும் எனவும் இந்த மாநாடு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கின்றது.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைப் பணியில்

(நிறுவனர்)

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235
மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com